# 3 சைவ விழுமியங்கள்

உலகிலுள்ள எல்லா மதங்களினுடைய நோக்கிலும் சமயம் என்பது ஒரு வாழ்க்கைநெறி அல்லது வாழும் முறை என்று குறிப்பிடலாம். பண்பாட்டின் ஒரு கூறாக ஒழுக்கம் அமைகின்றது. சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய அறமாக ஒழுக்கமும், அன்புநெறியும் அமைகின்றது. 'அன்பே சிவம்' என்கிறது திருமந்திரம்.

சைவநெறியானது ஒழுங்குபடுத்தப்பட்ட கலாசார மரபுகளைப் பேணக்கூடிய ஒழுகலாறுகளை சமயம் சார்ந்த அறவாழ்க்கையாகப் போதிக்கின்றது. நீதியான வாழ்க்கை முறையினை மேற்கொள்ளும் வகையில் எமது சமய நூல்கள் பல விழுமியங்களை வலியுறுத்துகின்றன. இங்கு 'விழுமியம்' என்பது உயர்ந்த பெறுமானம் என்ற வகையில் நோக்கப்படுகின்றது. மனித வாழ்வில் எமது ஆன்மீக இலட்சியத்தை எய்துவதற்கு இத்தகைய விழுமியங்கள் உதவுகின்றன.

1. கடமை 2. வாய்மை
3. அன்புடைமை 4. பிறரை மதித்தல்
5. ஒழுக்கமுடைமை 6. செய்ந்நன்றி மறவாமை

போன்றவை, சைவ சமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்களாகும். ''ஒழுக்க வாழ்வின் மூலம் பின்பற்றப்படுகின்ற நடத்தைகள் யாவும் விழுமியமாகும்'' என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

## (அ). அன்புடைமை

**''அன்பின் வழியது உயிர்நிலை...''** என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே மனித வாழ்க்கை மட்டுமன்றி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிற உயிர்களுக்கு அன்புகாட்டுதல், பேணுதல் என்பன அன்பே வடிவான கடவுளுக்குப் பிரியமான தொண்டாக அமையும் அதன் மூலம் சமயம் வலியுறுத்தும் இலட்சியவாழ்வும் நிறைவுபெறும்.

எமது கடவுள் வழிபாடு அன்பினை அடிப்படையாகக் கொண்டது. அன்பு தான் சிவம். அதனால் அன்பினை உள்ளத்திலிருத்தி அதனை எப்பொழுதும் நினைத்துச் செயற்படுதல் எமது கடமையாகும். அன்பை மலராகவும் ஆர்வத்தை நீராகவும் கொண்டு வழிபாடு செய்யும்போது நம்பிக்கை பிறக்கின்றது. ''அன்பும் சிவமும் ஒன்றுதான்'' எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

சைவசமயத்தின் நோக்கம் உயிர்கள் கடவுளை அடைவதாகும். அதற்குச் சைவர்கள் கடவுள் மீது பக்தி செலுத்துதல் வேண்டும். அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. அன்பு வாழ்வு தான் சைவசமயவாழ்வு, அன்புநெறியே சைவநெறி.

கடவுளைக் காலையிலும் மாலையிலும் மற்ற வேளைகளிலும் பூசித்தல், தியானித்தல், திருக்கோயில் வழிபாடு செய்தல், அவன் புகழ்பாடுதல் முதலிய முறைகளால் பக்தி செலுத்தலாம்.

உலகிலுள்ள அனைத்திலும் கடவுள் நிறைந்திருப்பதனால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் அவசியமாகும். உயிர்களிடத்தில் நாம் காட்டும் பரிவு இறைவனிடத்தில் கொள்ளும் பற்றுதலாகும். ஏழைகள் உள்ளத்தில் கடவுளைக் காணலாம், ஆகவே 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே''

எனத் தாயுமானவர் இறைவனை வேண்டுகின்றார். அன்பிலாத வாழ்வை ''என்புதோல் போர்த்த உடம்பு'' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். சிவபெருமானைக் கருணாமூர்த்தி என்றும் ஜீவகாருண்யன் என்றும் தயாபரன் என்றும் திருமுறைகள் போற்றும். ''அன்பில் விளைந்த ஆரமுதே...'' என்று மணிவாசகர் பாடுகின்றார்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்...'' உயர்ந்த அறமாகும். அந்த மனோநிலை அன்பினால் உண்டாகின்றது. பசித்து வந்தோருக்கும், உதவி வேண்டி வந்தோருக்கும் அவர்களின் தேவையை உணர்ந்து உதவுதல் தார்மீகக் கடமையாகும். ''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'' எனத் திருமூலர் குறிப்பிடுவது அன்பினால் விளைந்த ஜீவகாருண்யத்தைக் காட்டுவதாக உள்ளது.

### (ஆ). வாய்மை

இந்துமதம் வலியுறுத்தும் முக்கிய அறங்களில் ''வாய்மை'' முக்கியம் பெறுகின்றது. எத்தனை காலங்கள் முயன்றும் காக்கவேண்டிய விழுமியம் இதுவாகும். உள்ளத்தில் கோடாது உண்மையில் வாழும் வாழ்க்கை முறையே வாய்மையாகும், என அறநூல்கள் போதிக்கின்றன. மேலும் வாய்மை என்பதற்கு ''தீமைதராத சொற்களை விளம்புதல்'' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

''வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொல்''

நேர்மையாகவும் கடமை உணர்வோடும் செய்யப்படுகின்ற செயலால் மனிதரும் தெய்வமாகலாம். ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்முன் அறியப்படும்...'' என்ற சிலப்பதிகாரக் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது. மகாத்மா காந்தி, அரிச்சந்திரன் போன்றோர் ''வாய்மையே வெல்லும்'' என்ற இலட்சியவாழ்விற்கு முன்னுதாரணமாக விளங்கினர். வாழ்க்கையில் பெறற்கரிய செல்வங்கள் யாவும் ஒழிந்து போயினும் ''கட்டுரை இலக்கிலோம்'' என்று அரிச்சந்திரன் கூறிய வாக்கு, வாய்மையின் வலிமையை எடுத்துக்காட்டுகின்றது.

இந்து தர்மத்தில் வாய்மை, உண்மை, சத்தியம், நேர்மை, கடமை, பொய்யாமை

ஆகிய சொற்கள் எல்லாம் ஒரு பொருளையே குறிப்பதாக உள்ளது, பொய் பேசுதல் வாய்மைக்கு இழுக்காகும். கடமை தவறுதல் நேர்மையற்ற செயலாகும். ஒருவனுடைய சத்திய வாழ்க்கையே பிறவிப்பயனுக்கு ஏதுவாகின்றது. ''அறம் செய்ய விரும்பு'' என்று ஔவையார் குறிப்பிடுவதும் மனங்கொள்ளத் தக்கதேயாம்.

''புறத்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும்''

ஒருவனது உள்ளத்துத் தூய்மை அவனுடைய வாய்மையால் அறியப்படும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். வாய்மையின் பெருமைகளை வேதம் உள்ளிட்ட சமய நூல்கள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. வாய்மையின் சிறப்பை 'சத்யம் வத... தர்மம் சர' என்ற உபநிடத மகாவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதிகாசக் கதைகளின் வெற்றியே வாய்மையின் ஆற்றலினால் என்றால் மிகையாகாது.

வாழ்க்கை வேறு, சமயம் வேறென்று கூறமுடியாது. சமயம் காட்டும் வழியில்தான் வாழ்க்கை அமைகின்றது. ஆகவேதான் மனித வாழ்க்கை விழுமியங்களால் மெருகூட்டப்படுகின்றது. உண்மை, அகிம்சை, கடமை என்பன உயர்ந்த அறவாழ்க்கைக்கு அவசியமாகின்றன.

## பயிற்சிகள்

1. 'அன்பே சிவம்' என்ற திருமந்திரத்தின் பொருளை எழுதுக.
2. சைவநெறி எவற்றினைப் போதிக்கின்றது?
3. ஆன்மீக இலட்சியத்தினை அடைய உதவும் விழுமியங்கள் யாவை?
4. பிற உயிர்களுக்கு அன்பு செலுத்துதல் எவ்வாறு இறைவழிபாடாக அமையும்?
5. வாய்மை என்றால் என்ன? அன்பினால் உயர்ந்த இரு சான்றோர்களைக் குறிப்பிடுக.

## செயற்பாடுகள்

★ அன்புடைமை, வாய்மை பற்றி நீதிநூல்கள், சமய இலக்கியங்களில் காணப்படும் பாடல்களைத் தொகுத்து எழுதுக.
★ சமய விழுமியங்கள் பற்றி ஐந்து நிமிடம் பேசக்கூடிய சொற்பொழிவு ஒன்று எழுதுக.
★ மேற்படி விழுமியங்களுடன் தொடர்புடைய கதைகளை ஆசிரியரிடம் கேட்டு அறிக.

## பாடச்சுருக்கம்

★ விழுமியம் என்பது உயர்ந்த பெறுமானமாகும்.
★ பண்பாட்டின் ஒரு கூறாக ஒழுக்கமும் அன்பு நெறியும் அமைகின்றன.
★ விழுமியங்களாகக் கடமை, வாய்மை, அன்புடைமை, பிறரை மதித்தல், ஒழுக்கமுடைமை, செய்ந்நன்றி மறவாமை, என்பவை குறிப்பிடத்தக்கனவாகும்.
★ பிற உயிர்களில் அன்புகாட்டுதலே உண்மையான கடவுள் வழிபாடாகும்.
★ தீமை தராத சொற்கள் சொல்லுதலே வாய்மையாகும்.
★ அகத்தூய்மையே உண்மையான வாய்மையாகும்.